# கலாதீபம்

කලාදීපම්

KALADEEPAM

ஸ்தாபிதம் 2020 | 01.05.2023 – 31.05.2023 | தீபம் 12


### சிறப்புற இடம்பெற்ற

## கணித கற்பித்தல் உபகரணக் கண்காட்சி

கோப்பாய் ஆசிரிய கலாசாலை கணிதமன்ற ஏற்பாட்டில் இடம்பெற்ற கணித கற்பித்தல் உபகரணக் கண்காட்சி 02.05.2023 செவ்வாய்க்கிழமை பி.ப 2.00 மணியளவில் இடம்பெற்றது. இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் உப பீடாதிபதி (நிறுவன அபிவிருத்தி) திரு.அருணாசலம் குகன் அவர்கள் வருகை தந்தார். இவ்விழாவின் முதல் நிகழ்வாக பிரதம அதிதி திரு.அருணாசலம் குகன் அவர்கள் கல்லூரி முதல்வர் திரு.ச.லலீசன் அவர்களால் பொன்னாடை அணிவிக்கப்பட்டும், பிரதிஅதிபர் திரு.க.செந்தில்குமரன் அவர்களால் மாலை அணிவிக்கப்பட்டும் கௌரவிக்கப்பட்டார். அதனைத் தொடர்ந்து மங்கல விளக்கேற்றும் நிகழ்வு இடம்பெற்றது. அடுத்து பிரதமஅதிதி அவர்களால் கண்காட்சிக்கூடம் சம்பிரதாய பூர்வமாக திறந்து வைக்கப்பட்டது. பின்னர் கல்லூரியின் முதல்வர் திரு.ச.லலீசன் அவர்களால் தலைமையுரையாற்றப்பட்டது. அவர் தனது உரையில் கணிதத்தின் சிறப்புக்கள் பற்றியும், கணிதமே வாழ்க்கை என்றும் குறிப்பிட்டார். மேலும் வளம் மிக்க கணிதம்சார், வணிகம்சார், விஞ்ஞானம்சார் விரிவுரையாளர்கள் உள்ளனர் என்றும், குறுகிய காலத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வு பாராட்டத்தக்கதெனவும் குறிப்பிட்டுள்ளார். அதனைத் தொடர்ந்து கணிதமன்றக் காப்பாளர் திரு.இ.இராசபாலன் அவர்கள கணிதப் பிரிவில் மாணவர் தொகை குறைவாக உள்ளநிலையில் ஆரம்பப் பிரிவு, வர்த்தகப் பிரிவு மாணவர்கள் இணைந்தும், குறுகிய காலத் திட்டமிடலிலுமே இந் நிகழ்வானது சிறப்பாக இடம் பெறுகிறது என தனது உரையில் குறிப்பிட்டார். இதனைத் தொடர்ந்து பிரதம அதிதி உரை இடம்பெற்றது. அவர் தனது உரையில், கணித பாடத்திற்கு கற்றல் சாதனம் இன்றியமையாதது என்றும், அதனூடாக கற்பிக்கும்போது மாணவர்கள் இலகுவில் விளங்கிக் கொள்வர் என்றும் குறிப்பிட்டார். மேலும் இன்றைய காலத்தில் கணிதபாட சித்திவீதத்திலுள்ள குறைவிற்கு ஆசிரியர்களும் ஒரு வகையில் காரணமாக இருக்கின்றனர் என்றும் இவ்வாறான ஆசிரியர் பயிற்சிக் காலத்தில் இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறுவது வரவேற்கத்தக்கதாகும் எனக் குறிப்பிட்டார்



தொடர்ச்சி 4 பக்கம் ➡

## கலாதீபக் குழுமம்

**காப்பாளர்**
திரு சந்திரமௌலீசன் லலீசன்
அதிபர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை

**பிரதம ஆசிரியர்**
செல்வி தர்ஷினி முத்துராஜா
விரிவுரையாளர், காப்பாளர் ஊடகக்கழகம்

**வள ஆலோசனை**
திரு கணபதிப்பிள்ளை செந்தில்குமரன்
பிரதி அதிபர்
தங்கராஜா கோபாலகிருஷ்ணன்
பிரதி அதிபர்
திருமதி சத்தியா ரஞ்சித்
உபஅதிபர்

**இணை ஆசிரியர்கள்**
செல்வி மாலதி பத்மநாதன்
விரிவுரையாளர்

திரு வேலும்மயிலும் நந்தகுமார்
விரிவுரையாளர்

செல்வி சுஜீவா அருள்லிங்கம்
விரிவுரையாளர்

**பட ஒருங்கிணைப்பு**
தங்கன் இன்பதாஸ்
ஆசிரியமாணவன் - உடற்கல்வி (2021/2022)

செல்வநாயகம் கஜந்தன்
தொழில்நுட்ப உதவியாளர்



கலாதீபத்தில் வெளிவரும் ஆக்கங்களுக்கு அவற்றை எழுதியவர்களே பொறுப்புடையவராவார். ஆக்கங்களில் வெளியிடப்படும் கருத்துக்கள் கலாசாலையின் கருத்துக்களாக கொள்ளப்படமாட்டா.



**வெளியீடு**
கோப்பாய் ஆசிரியர் கலாசாலை
இருபாலை கோண்டாவில் வீதி,
இருபாலை.
தொலைபேசி: 0212230323

**மின்னஞ்சல் முகவரி**
kaladeepam.ktc@gmail.com


## இருபாலை கற்பகப் பிள்ளையார் கோவில் வருடாந்த மகோற்சவம்

இருபாலை கற்பகப் பிள்ளையார் கோவில் வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் முப்பதாம் தேதி 30.05.2023 செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாக உள்ளது எதிர்வரும் வியாழக்கிழமை 01.06.2023 கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் உபயமாக திருவிழா இடம் பெற உள்ள நிலையில் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ பா. செல்வசேனக் குருக்கள் மகோற்சவ பத்திரிகையை சம்பிரதாய பூர்வமாக கலாசாலை அதிபரிடம் கையளித்தார்



## கலாசாலையின் இறுதிப்பரீட்சை அறிவித்தல்

**2020/21 கல்வியாண்டு ஆசிரிய மாணவர்களுக்கான இறுதிப் பரீட்சை யூலை இரண்டாம் வாரத்தில் நடைபெற பரீட்சை திணைக்களம் ஏற்பாடு செய்வதாக தெரிய வருவதாக அதிபர் அறியத்தந்துள்ளார். இந்நிலையில் கவனமெடுத்து கற்குமாறு ஆசிரிய மாணவர்களைக் கோரியுள்ளார். இப்பரீட்சையை 184 ஆசிரிய மாணவர்கள் முதல் தடவையாகவும் கடந்த பரீட்சையில் நூன சித்திபெற்ற 179 ஆசிரிய மாணவர்களும் இப்பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர்**

# கலாதீபம்

கலாதீபம் – மின்சஞ்சிகை – கோப்பாய் ஆசிரிய கலாசாலை ஊடகக் கழக வெளியீடு

කලා දීපම , e - සඟරාව, කෝප්පායි ගුරු විද්‍යාලයීය මාධ්‍ය සංගමයේ ප්‍රකාශනයක්.

The Kaladeepam - e magazine - published by media club of Kopay Teachers' College


## நமது நோக்கு

**கலாசாலையின் பெறுபேற்று மூலப்பிரதியினைப் பெற்றுக்கொள்வதில் தாமதம்**

இலங்கையிலுள்ள ஆசிரிய கலாசாலைகளில் பயின்ற ஆசிரிய மாணவர் எவருக்கும் பரீட்சைச் சான்றிதழ் மூலப்பிரதி இதுவரை வழங்கப்படாதது துரதிஸ்ட வசமானது. இது தொடர்பாக எமது கலாசாலை நிர்வாகத்தினர் பல தடவைகள் சம்பந்தப்பட்டவர்களுக்கு தெரியப்படுத்தியிருந்ததாக குறிப்பிட்டிருந்தனர்.

தரம் III அதிபர் நியமனத்தின் நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பிக்கப்பட வேண்டிய முக்கிய ஆவணமாக இந்த சான்றிதழ் விளங்குகிளது. பரீட்சை சான்றிதழ் வெளியீட்டின் தாமதம் காரணமாக பரீட்சாத்திகள் நேர்முகப் பரீட்சையில் அசௌகரிகங்களை எதிர்கொண்டுள்ளனர். இவர்களுக்கான தற்காலிக ஏற்பாடான கலாசாலையில் வழங்கப்பட்ட அதிபரின் பெறுபேற்றுப் பத்திரம் நேர்முகத் தேர்வில் ஏற்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நவீன வசதிகள் மேம்பட்டுள்ள இக் காலகட்டத்தில் பதின்மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக பெறுபேற்றுப் பத்திரம் கையளிக்கப்படாமை கவலைக்குரிய விடயமாகும். இது விடயத்தில் சம்பந்தப்பட்டோர் கூடிய சிரத்தை எடுத்து சான்றிதழின் மூலப்பிரதி உரியவர்களுக்கு கையளிக்கப்படவேண்டும். இது காலத்தின் தேவையாக கருதப்படுகிறது.

## யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி இசைத்துறை விரிவுரையாளர் திருமதி விக்னேஸ்வரி நரேந்திரா மணிவிழா நிகழ்வில் கலாசாலையினரும்.....

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி இசைத்துறை விரிவுரையாளர் திருமதி விக்னேஸ்வரி நரேந்திரா அவர்களின் மணிவிழா கடந்த 16.05.2023 செவ்வாய்க்கிழமை கல்வியியல் கல்லூரியில் பீடாதிபதி திரு எஸ் பரமானந்தம் தலைமையில் நடைபெற்றது

இந்நிகழ்வில் கோப்பாய் ஆசிரிய கலாசாலை சமூகத்தினரும் நேரில் சென்று அரச பணியிலிருந்து ஓய்வு பெறும் மணிவிழா நாயகியை கௌரவித்து வாழ்த்து தெரிவித்தனர் கலாசாலையின் முன்னாள் அதிபர் திரு ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தியும் எம்முடன் இணைந்திருந்தார்.





# News in Brief
# Month of May

**02.05.2023**
Mathematical Learning Aids Exhibition organized by Kopay Teachers' College Mathematics Forum was held on 02.05.2023 at 2 pm under the leadership of Mr. S. Laleesan, principal of the college. Mr. Arunachalam Gugan, Vice President (Institutional Development) of Jaffna National College of Education participated as the Chief Guest.

**03.05.2023**
**Wednessday Assembly** -Jaffna University Physical Education Instructor Mr M. Elampraiyan - delivered a keynote speech. This programme was presented by the teacher students of 1st year Primary course, Special Education and Second Language Teacher trainees. Guest Introductory Speech - Lecturer Mr. M. Bhaskaran
Ms. Vijitha Kamalavannan, first year of primary education, also delivered the teacher Trainee speech. certificates were awarded to the Teacher Trainees who participated in the road race event and completed.

**Teaching practicum**
**08.05.2023 - 26.05.2023**
The teaching practicum for the first and second year teacher trainees of Kopay Teachers' College was held for three consecutive weeks from 08.05.2023

**31.05.2023**
**Wednessday Assembly -** Mr Sara Puvaneswaran, former lecturer of the Kopay Teachers' College and Honorable Secretary Ceylon Tamil Teachers Union (CTTU) attended the event and delivered keynote address. This programme was presented by the teacher trainees of 1st year English course.
May 31 is the finial official working day for sara Puvaneswaran's service. He was honored by the college community.
Guest Introductory Speech - Lecturer Mrs. K.Anparacy and Mrs. S. Dharmani first year English Course, also delivered the Teacher Trainee speech.

**1ம் பக்க தொடர்ச்சி.......**

இதனைத் தொடர்ந்து கணிதமன்ற தலைவர் த.வசந்தமலர் அவர்களால் நன்றியுரை நிகழ்த்தப்பட்டது. பின்னர் கல்லூரியின் முதல்வர், பிரதமஅதிதி, பிரதிஅதிபர்கள், உபஅதிபர், விரிவுரையாளர்கள், கல்வி சாரா ஊழியர்கள், ஆசிரிய மாணவர்கள் ஆகியோர் கண்காட்சியைப் பார்வையிட்டனர்.

கண்காட்சி போட்டியாக இடம்பெற்றமையால், அதனை மதிப்பீடு செய்து புள்ளி வழங்குதலில் எமது விரிவுரையாளர்களான

திரு.பொ.சற்குணநாதன் திரு.த.தவசேகர், செல்வி.ப.மாலதி, தருமதி.பா.சர்மிளா ஆகியோர் ஈடுபட்டனர். கண்காட்சியின்போது ஆசிரிய மாணவர்கள் கற்றல்சாதனங்களைப் பயன்படுத்தல் தொடர்பாக போதிய விளக்கமளித்தனர்

இப்போட்டியில் ஆரம்பப்பிரிவில்1ம் இடத்தை திருமதி ளு.கஜிதாவும்2இடத்தை திரு.வு.சதீஸ், 3ம்இடத்தை திருமதி வு..சுபாஜினியும் பெற்ற தோடு இடை நிலைப்பிரிவில்1ம் இடத்தை திருமதி ஆ.ளு.பெரோசா (Feroza)வும் 2ம் இடத்தை திருமதி.வு.வசந்தமலரும், 3ம் இடத்தை திருமதி வு.கல்பனாவும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். கண்காட்சி பி.ப5.00 மணியளவில் இனிதே நிறைவடைந்தது.





கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் கண்காட்சி

யாழ். கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் கணித மன்றத்தின் ஏற்பாட்டில் கற்றல் உபகரணக் கண்காட்சி அக்கலாசாலையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (02) நடை...

...கலாசாலை அதிபர் ச.ல...மையில் நடைபெற்ற க.பொ.த. சாதாரணதரம் வரை கணித பாடத்தைக் கற்கும் மாணவர்களுக்கு பயன்படக்கூடிய கற்றல் உபகரணங்களை ஆசிரிய மாணவர்கள் உருவாக்கி காட்சிப்படுத்தினர்.

இக்கண்காட்சியில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியின் உப பீடாதிபதி அருணாசலம் குகன் கலந்துகொண்டார்.

இதன்போது கணித மன்றக் காப்பாளர், விரிவுரையாளர் இ.இராஜபாலன் வாழ்த்துரை வழங்கினார்.

தினகரன் பத்திரிகை

# கணித பாட கற்பித்தல் உபகரண கண்காட்சி போட்டியில் வெற்றி பெற்றோர் விபரம்

## ஆரம்பப் பிரிவு

| இல | வகுப்பு | பதிவு இலக்கம் | பெயர் | நிலை |
|---|---|---|---|---|
| 01 | 2ம் வருடம் ஆரம்பக்கல்வி | 9512 | திருமதி.சுவேதன் கஜீதா | 1 |
| 02 | 2ம் வருடம் ஆரம்பக்கல்வி | 9518 | திரு.திருச்செல்வம் சதீஸ்குமார் | 2 |
| 03 | 2ம் வருடம் ஆரம்பக்கல்வி | 9508 | திருமதி. கஜன்குமார் சுபாஜினி | 3 |
| 04 | 2ம் வருடம் ஆரம்பக்கல்வி | 9515 | திருமதி. முஹம்மட் ஸஜ்ஜாத்.அனுஷா | 4 |
| 05 | 2ம் வருடம் ஆரம்பக்கல்வி | 9527 | திருமதி.செல்வநீதி.துவாரகா | 5 |
| 06 | 2ம் வருடம் ஆரம்பக்கல்வி | 9519 | திருமதி.முஹம்மட் பைறோஸ்.அன்சியா | 6 |
| 07 | 2ம் வருடம் ஆரம்பக்கல்வி | 9514 | திருமதி.இஸ்ஸதீன்.சவ்பீனா | 7 |
| 08 | 2ம் வருடம் ஆரம்பக்கல்வி | 9510 | திருமதி.குகேந்திரன்.நிரோஜினி | 8 |
| 09 | 2ம் வருடம் ஆரம்பக்கல்வி | 9511 | திருமதி.முஹம்மட் றம்ஸ்ன் றஜீதா | 9 |
| 10 | 2ம் வருடம் ஆரம்பக்கல்வி | 9522 | திருமதி.முஹம்மட் றிஸ்வின் பாத்திமா நுஸ்கா | 9 |
| 11 | 2ம் வருடம் ஆரம்பக்கல்வி | 9532 | திருமதி.ஜென்பேட் லியோ.அனித்தா | 11 |
| 12 | 2ம் வருடம் ஆரம்பக்கல்வி | 9516 | திருமதி.திருநாவுக்கரசு புவனேஸ்வரி | 12 |
| 13 | 2ம் வருடம் ஆரம்பக்கல்வி | 9509 | திருமதி.அஸ்ஹர் றமீனா உம்மா | 12 |

## இடைநிலைப் பிரிவு

| இல | வகுப்பு | பதிவு இலக்கம் | பெயர் | நிலை |
|---|---|---|---|---|
| 01 | 2ம் வருடம் கணிதம் | 9440 | திருமதி.அஹமட் ஹிஜான் பெறோஸா | 1 |
| 02 | 2ம் வருடம் கணிதம் | 9442 | திருமதி.தனரஜ்ஜன்.வசந்தமலர் | 2 |
| 03 | 2ம் வருடம் வர்த்தம் | 9443 | திருமதி.சுதர்சன்.கல்பனா | 3 |
| 04 | 2ம் வருடம் கணிதம் | 9441 | திரு.சாகுல் ஹமீது முஹம்மது மாஹிர் | 4 |
| 05 | 2ம் வருடம் கணிதம் | 9439 | திரு.சரவணபவன்.கஜராஜ் | 5 |


# பணி நயந்து வாழ்த்துகிறோம்

**திருமதி சி. ஜெயராஜா**
**விரிவுரையாளர்**



எமது காலாசாலையில் 25.05.2012 முதல் ஆங்கில பாட விரிவுரையாளராக கடமையாற்றி ஆங்கில இலக்கியம், ஆங்கில மொழியியல், பொது ஆங்கிலம் ஆகிய பாடத்துறை மேம்பாட்டிற்கும் மற்றும் ஆங்கில மன்ற ஆங்கிலம்சார் நிகழ்வுகளுக்கும் பங்களிப்பு நல்கி வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் கீழ் தனது சேவைக்கான இடமாற்றத்தைப் 20.04.2023ல் இருந்து பெற்றுக் கொண்டுள்ளார். இவர் கலாசாலையில் நல்கிய பணிகளுக்கு நன்றி கூறுவதுடன் இனி வரும் காலங்களிலும் இவரது பணி சிறக்க வாழ்த்துகிறோம்.

**திரு அ. பாலச்சந்திரமூர்த்தி**
**விரிவுரையாளர்**



எமது கலாசாலையில் 03.11.2014 தொடக்கம் சுற்றாடல் மற்றும் சமூக விஞ்ஞான பாட விரிவுரையாளராக கடமையாற்றி அப்பாடத்துறைகள் சார் மேம்பாட்டிற்கும் ஏனைய இணைப் பாடவிதான செயற்பாடுகளுக்கும் பங்களிப்பு நல்கி வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் கீழ் தனது சேவைக்கான இடமாற்றத்தினை 28.04.2023 பெற்றுக் கொண்டுள்ளார். இவர் கலாசாலையில் நல்கிய பணிகளுக்கு நன்றி கூறுவதுடன் இனிவரும் காலங்களிலும் இவரது பணி சிறக்க வாழ்த்துகிறோம்.

**திரு கா.குகபரன்**
**விரிவுரையாளர்**



எமது கலாசாலையில் 15.01.2013 தொடக்கம் சங்கீதத்துறை விரிவுரையாளராகப் பணியாற்றி சங்கீதப் பாடத்துறை மேம்பாட்டிற்றும் அழகியல் நிகழ்வுகளின் செயற்பாடுகளுக்கும் பங்களிப்பு நல்கி வடக்கு மாகாணக் கல்வித்திணக்களத்தின் கீழ் தனது சேவைக்கான இடமாற்றத்தினை 02.05.2023 பெற்றுக் கொண்டுள்ளார். இவர் கலாசாலையில் நல்கிய பணிகளுக்கு நன்றி கூறுவதுடன் இனிவரும் காலங்களிலும் இவரது பணி சிறக்க வாழ்த்துகிறோம்.

**திரு ஜெ பாலகுமார்**
**விரிவுரையாளர்**



எமது கலாசாலையில் 03.11.2014 தொடக்கம் கிறிஸ்தவ பாடத்துறை விரிவுரையாளராகப் கடமையாற்றி அப்பாடநெறிசார் மேம்பாட்டிற்கும் கிறிஸ்தவ மன்ற செயற்பாடுகளுக்கும் ஏனைய இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்கும் பங்களிப்பு நல்கி வடக்கு மாகாணக் கல்வித்திணக்களத்தின் கீழ் தனது சேவைக்கான இடமாற்றத்தினை 25.04.2023 பெற்றுக் கொண்டுள்ளார். இவர் கலாசாலையில் நல்கிய பணிகளுக்கு நன்றி கூறுவதுடன் இனிவரும் காலங்களிலும் இவரது பணி சிறக்க வாழ்த்துகிறோம்.

**திருமதி பௌ.பஞ்சலிங்கம்**
**விரிவுரையாளர்**



எமது கலாசாலையில் 28.01.2013 தொடக்கம் மனைப்பொருளியல்துறை விரிவுரையாளராக கடமையாற்றி அத்துறைசார் பாடத்துறை மேம்பாட்டிற்கும் மனைப்பொருளியல் மன்றச் செயற்பாட்டிற்கும் பங்களிப்பு நல்கி வடக்கு மாகாணக் கல்வித்திணைக்களத்தின் கீழ் தனது சேவைக்கான இடமாற்றத்தினை 25.04.2023 பெற்றுக் கொண்டுள்ளார். இவர் கலாசாலையில் நல்கிய பணிகளுக்கு நன்றி கூறுவதுடன் இனிவரும் காலங்களிலும் இவரது பணி சிறக்க வாழ்த்துகிறோம்.

**திரு வ.சசிகுமார்**
**விரிவுரையாளர்**



எமது காலாசாலையில் 03.11.2014 முதல் ஆங்கிலத்துறை விரிவுரையாளராக கடமையாற்றி ஆங்கிலம் பொது ஆங்கிலம் ஆகிய பாடத்துறை மேம்பாட்டிற்கும் மற்றும் ஆங்கில மன்றம், ஆங்கிலம்சார் நிகழ்வுகளுக்கும் மற்றும் கலை நிகழ்வுகளுக்கும் பங்களிப்பு நல்கி வடக்கு மாகாண கல்வித்திணைக்களத்தின் கீழ் தனது சேவைக்கான இடமாற்றத்தைப் 26.04.2023ல் இருந்து பெற்றுக் கொண்டுள்ளார். இவர் கலாசாலையில் நல்கிய பணிகளுக்கு நன்றி கூறுவதுடன் இனிவரும் காலங்களிலும் இவரது பணி சிறக்க வாழ்த்துகிறோம்.

**திரு ச.லலீசன் - அதிபர்(SLTES), கோப்பாய் ஆசிரியர் கலாசாலை.**

# புதன் ஒன்றுகூடலில் அதிதி பேச்சாளர் திரு மா.இளம்பிறையன், சிரேஸ்ட போதனாசிரியர் (உடற்கல்வி) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கலந்துகொண்டு சிறப்பித்தார்.



03.05.2023 இன்றைய புதன் ஒன்றுகூடல் (அசெம்பிளி) இன்றைய நிகழ்வானது அதிபர் ச.லலீசன் தலைமையில் காலை 8.45 மணியளவில் ஆரம்பமாகியது.

இந்நிகழ்வினை ஆரம்பக்கல்வி, விசேடகல்வி, மற்றும் இரண்டாம் மொழி தமிழ் பிரிவு ஆசிரிய மாணவர்கள் முன்னெடுத்துச் சென்றனர்.

அதிதி பேச்சாளர் திரு மா.இளம்பிறையன், விரிவுரையாளர் (உடற்கல்வி) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.கலந்துகொண்டு சிறப்பித்தார்.

அதிதி அறிமுக உரை - விரிவுரையாளர் திரு மா.பாஸ்கரன் அவர்களும் ஆசிரிய மாணவர் உரையினை ஆரம்பக்கல்வி முதலாம் வருட திருமதி விஜிதா கமலவண்ணன் அவர்களும் ஆற்றினர்.

அத்துடன் வீதியோட்ட நிகழ்வில் பங்குபற்றி நிறைவு செய்த ஆசிரிய மாணவர்களுக்கான சான்றிதழ்கள் உடலாளர் மன்றத்தினரால் வழங்கப்பட்டது.



# அதிதி பேச்சாளர் திரு சரா புவனேஸ்வரன் முன்னைநாள் விரிவுரையாளர், கௌரவ பொதுச் செயலாளர் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

**"இந்த மேடை பல தடவைகள் என்னைப் பல வகைகளில் ஏற்றி மகிழ்ந்திருக்கிறது.இன்று இந்த மேடையில் நிற்கும்போது ஒரு வித்தியாசமான அனுபவம் 35 வருட ஆசிரியர் சேவையிலிருந்து ஓய்வு பெறும் இன்றைய நாளில் 31.05.2023 இக்கலாசாலை என்னை அழைத்து கௌரவப்படுத்தியமையை பெருமையாகக் கருதுகின்றேன்"**

இவ்வாறு தனக்கு கற்பித்த ஆசிரியர்கள், தன்னுடைய ஆசிரிய வாழ்வுக் காலங்கள், விரிவுரையாளர் பணிக்காலங்கள் போன்ற பல் வேறுபட்ட அனுபவங்களையும் பகிர்ந்துகொண்டார் திரு சரா புவனேஸ்வரன்.

தான் கற்ற காலங்களின் பசுமையான நினைவுகளையும். யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி ஆசிரியராக, யாழ்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி மற்றும் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை என்பவற்றில் விரிவுரையாளராக இருந்த காலத்தின் நினைவுகளையும் மீட்டிக் கொண்டார். தற்போது ஒரு ஆசிரியர் எப்படி இருக்கவேண்டும் என்பதனை விளக்கினார்.

ஆசிரியர்கள் மாணவர்களைத் தண்டித்தல் அதனால் ஏற்படும் சமகாலப் பிரச்சினைகள் என்பவை பற்றியும் ஓர் ஆசிரியர் எப்படி இருக்கவேண்டும் என்ற விடயத்தையும் எடுத்துக் கூறினார்.

கலாசாலையின் அதிபர் திரு ச.லலீசன் அவருக்கு நினைவுச்சின்னம் ஒன்றினை வழங்கி கௌரவிக்க பிரதி அதிபர் திரு க.செந்தில்குமரன் பொன்னாடைபோர்த்தியும், பிரதி அதிபர் திரு த.கோபாலகிருஷ்ணன் மாலை அணிவித்தும் மதிப்பளித்தனர். அதன் பின்னர் மணிவிழா நாயகன் திரு சரவணமுத்து புவனேஸ்வரன் விரிவுரையாளர் குழாமுடன் இணைந்து தேநீர் விருந்துபசாரத்தையும் ஏற்றுக் கொண்டார்.

தொகுப்பு — திரு வேல் நந்தகுமார் (விரிவுரையாளர்SLTES)
கோப்பாய் ஆசிரியர் கலாசாலை







# Teachers are indeed

**"Ignorance is the darkness**
**Which is swallowing the society.**
**Sway on the preaching is the madness**
**Which is like testing our own loyalty.**
**After became blind**
**No use having kind**
**Towards the sparkle-unfortunately**
**Never realize the price by the people.**
**Possible, to feed everybody for physical health**
**Satisfied with tasting buds.**
**Impossible, to feed everybody for mental health**
**By the alone almighty God.**
**To assist them, On behalf of God**
**We became the asset.**
**To absorb gloomy away from the earth**
**We came here to set"**

Yes, Teachers are the solid representative for wisdom who were chosen by God or Nature to rectify errors or cure ill which is around us either Calamities or incurable sickness.

"The lack of Institution causes erupting the number of jails"

In the Contemporary world we have sufficient with sophisticated classrooms and premises.

So, Then? How is increased the crime rate? Who is the responsibility to claim it?

Finally, all the fingers might index us, because we are Scapegoat of the society and higher officials. Just think, couple of decades ago.....

The name of teaching possessed a lot of respect and dignity among the people in the society, students also had respect and dignity towards the teacher. Then, Teachers were the power centers who produced good Citizen because they had rights and powers to sculpt a student instead of let them become culprit.

See, how teachers' hands are locked by the Government and rules with irons fists, "when we relaxed the grip on student's crime rates is being risen.

Although we have number of hurdles, we never fail to be a perfect teacher. The teacher is not just a word; which is a light house indicate correct direction towards great things. As we are sculptors, it's on our hand to remain the stone same or turn it into a statue. It is realized or not "Teachers are indeed".

**Mrs S.Dharmini**
**English Course (2023/2024)**
**Kopay Teachers' College**



## பேராசிரியர் மௌனகுரு அவர்கள் கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்கு வருகை தந்தார்.

கிழக்கிலங்கையில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த பேராசிரியர் சி.மௌனகுரு அவர்கள் நல்லெண்ண அடிப்படையில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலைக்கு வருகை தந்து சிறப்பித்தார்

பேராசிரியர் அவர்கள் 1981 - 82 காலப்பகுதியில் பலாலி ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளராக பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது

பேராசிரியரை கலாசாலை அதிபர் ச. லலீசன் பேராசிரியரின் மாணவியும் நாடகத் துறை விரிவுரையாளருமாகிய திருமதி சந்திரிகா தர்மரத்தினம் கலாசாலையின் முன்னாள் அதிபர் திரு வீ கருணலிங்கம் ஆகியோர் வரவேற்றனர்





## கற்பித்தல் பயிற்சி தொடர்பான பதிவுகள்

03.05.2023 அன்று கற்பித்தல் பயிற்சி தொடர்பான தயார்ப்படுத்தல் செயற்பாடுகள் செவ்வனே இடம்பெற்றன.





கற்பித்தல் பயிற்சி தொடர்பான நடைமுறை சவால்களை ஆராய்ந்து தீர்வினை முன்வைக்கும் கூட்டம் 11.05.2023 மற்றும் 18.05.2023 வியாழன் பிற்பகல் 2 மணிக்கு கலாசாலையில் நடைபெற்றது.



# நிகழ்வுகளின் தொகுப்பு

## கணித உபகரணப் போட்டி நிகழ்வு
















# புதன் காலை ஒன்றுகூடல் நிகழ்வுகளின் தொகுப்பு
















03.05.2023



31.05.2023

இப்பத்திரிகை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ஊடகக்கழகத்தினால் 01.06.2023 அன்று மின்னிதழாக வெளியீடு செய்யப்பட்டது